பருத்தி வயல்களில் வேளாண் விஞ்ஞானிகள் ஆய்வு

05.07.2017 அன்று திருவாரூர் வட்டாரம் வடகரை மற்றும் கீழ மணலி கிராமங்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளால் தாக்கப்பட்ட பருத்தி வயல்களை நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.பாஸ்கரன், பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ், வேப்பந்தட்டை மற்றும் கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் பருத்தி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள், திருச்சியில் உள்ள தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் ஆகியோர் பார்வையிட்டு உரிய பரிந்துரைகளை வழங்கினர்.

குதிரைவாலி சாகுபடி - வேளாண் விஞ்ஞானிகள் கள ஆய்வு

காவிரி டெல்டா மாவட்டங்களில் சிறுதானியப் பயிர்களைச் சாகுபடிக்குக் கொணர்தல் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கொரடாச்சேரி வட்டாரம் விஸ்வநாதபுரம் கிராமத்தைச் சார்ந்த விவசாயிகள் சாகுபடி செய்துள்ள வறட்சியைத் தாங்கி வளரும் கோ-2 ரக குதிரைவாலி வயல்களை 04.07.2017 அன்று திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.பாஸ்கரன் அவர்களும், பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ் அவர்களும் ஆய்வு செய்து விவசாயிகளுடன் கலந்துரையாடினர்.

மக்காச்சோள மற்றும் நெல் வயல்களில் வேளாண் விஞ்ஞானிகள் கள ஆய்வு

தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ் இராயபுரம், ஆதனூர் மற்றும் புள்ளவராயன்குடிக்காடு பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மக்காச்சோள வயல்களையும், குறுவை நெல் வயல்களையும் 07.09.2017 அன்று நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.பாஸ்கரன், பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ் ஆகியோர் ஆய்வு செய்து விவசாயிகளுடன் கலந்துரையாடினர்.

சிறுதானியப் பயிர் வயல்களை வேளாண் இயக்குநர் பார்வையிடல்

08.09.2017 அன்று கொரடாச்சேரி வட்டாரம் விஸ்வநாதபுரம் கிராமத்தில் சிறுதானியப் பயிர்களைச் சாகுபடிக்குக் கொணர்தல் திட்டத்தின் கீழ் சாகுபடி செய்துள்ள கோ2 ரக குதிரைவாலி வயல்களை வேளாண் இயக்குநர் திரு. வே. தெட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப அவர்கள் பார்வையிட்டுப் பயனாளிகளுடன் கலந்துரையாடினார். நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.பாஸ்கரன், பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

வெற்றி உழவரின் ஒருங்கிணைந்த பண்ணையம் - வேளாண் விஞ்ஞானிகள் கள ஆய்வு

நீடாமங்கலம் வட்டாரம் தேவங்குடி கிராமத்தில் வெற்றி விவசாயி திரு. ராஜ்குமார் அவர்கள் வயலில் உள்ள ஒருங்கிணைந்த பண்ணையத்தின் ஒரு அங்கமான மீன் வளர்ப்பு, நெல் சாகுபடி, மக்காச்சோள சாகுபடி ஆகியவற்றை 20.09.2017அன்று நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.பாஸ்கரன், பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்ட (பயிர் வகை) வேளாண் இணை இயக்குநர் கலந்துரையாடல்

தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் வேளாண் இணை இயக்குநர் திரு. தனசேகரன் அவர்கள் 19.07.2017 அன்று நிலையத்திற்கு வருகை புரிந்து நிலையத்தின் பல்வேறு செயல்பாடுகளைக் கேட்டறிந்தார். முன்னதாக நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.பாஸ்கரன், பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ் ஆகியோர் நிலைய வளாகத்தில் உள்ள பல்வேறு செயல் விளக்க மாதிரிகளையும் விளக்கிக் கூறினர்.

மண் மற்றும் நீர் மாதிரிகள் ஆய்வு

இந்நிலையத்தில் மண் மற்றும் நீர் மாதிரிகள் பரிசோதனை செய்யப்படுகின்றன. மண் மாதிரி ஒன்றுக்கு ரூ.50/- நீர் மாதிரி ஒன்றுக்கு ரூ.50/- தேவைப்படுவோர் இந்த வசதியைப் பயன்படுத்துவீர். தொடர்புக்கு : 04367 - 260666, 261444.

உழவரின் வளரும் வேளாண்மை

சந்தா விவரம் :

○ தனி இதழ் - ரூ. 20/-
○ ஆண்டு சந்தா - ரூ. 200/-
○ ஆயுள் சந்தா - ரூ. 2000/-
(15 ஆண்டுகள்)

தொடர்புக்கு :

ஆசிரியர்,
உழவரின் வளரும் வேளாண்மை,
விரிவாக்கக் கல்வி இயக்ககம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641003.
தொலைபேசி எண் - 0422 - 6611538

அஞ்சல்தலை
☐

பெறுநர்

திரு / திருமதி

____________________ அவர்கள்

____

____

அனுப்புநர்
திட்ட ஒருங்கிணைப்பாளர்,
வேளாண்மை அறிவியல் நிலையம்,
நீடாமங்கலம் - 614 404,
திருவாரூர் மாவட்டம்.
தொலைபேசி : 04367 - 261444 / 260666
மின்னஞ்சல் : kvkndm@tnau.ac.in
வலைத்தளம் : www.kvkthiruvarur.com

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
வேளாண்மை அறிவியல் நிலையம்
நீடாமங்கலம் - 614 404, திருவாரூர் மாவட்டம்

நெற்களஞ்சியம்

களம் 1
நெல் 2
ஜூலை - செப்டம்பர் 2017

சிறப்பு ஆசிரியர்
முனைவர் ஹெ.பிலிப்,
விரிவாக்கக் கல்வி இயக்குநர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

ஆசிரியர்
முனைவர் ஆ.பாஸ்கரன்,
திட்ட ஒருங்கிணைப்பாளர்.

இணை ஆசிரியர்
முனைவர் இராஜா.ரமேஷ்,
உதவிப் பேராசிரியர் (பூச்சியியல்)

ஆசிரியர் குழு
மருத்துவர் செ.சரவணன்,
உதவிப் பேராசிரியர்
(கால்நடை மருத்துவம்)
திருமதி தெ.ரேகா,
திட்ட உதவியாளர்
(தொழில் நுட்பம்)
பொறியாளர் இரா.சகுந்தலா,
திட்ட உதவியாளர் (கணினி)
திரு. துரை.நக்கீரன்,
பண்ணை மேலாளர்.

முக்கிய நிகழ்வுகள்

ஹைதராபாத் வேளாண் தொழில் நுட்ப ஆராய்ச்சி மைய இயக்குநர் மற்றும் கோவை விரிவாக்கக் கல்வி இயக்குநர் ஆய்வு

பருவநிலை மாற்றத்திற்கு உகந்த மீள் தன்மையுள்ள வேளாண் திட்டமானது இராயபுரம் கிராமத்தில் கடந்த 2 ஆண்டுகளாகச் செயல்படுத்தப் படுகிறது. மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் நோக்கம் காலநிலை மாற்றத்திற்கேற்ற தொழில்நுட்பங்களைப் பரவச்செய்து விவசாயிகளின் வருவாயைப் பெருக்குவது ஆகும்.

இத்திட்டத்தில் செயல்படுத்தப் பட்ட பணிகளின் ஆய்வு மற்றும் இனி மேற்கொள்ள இருக்கும் பணிகள் குறித்து ஐதராபாத் வேளாண் தொழில் நுட்ப ஆராய்ச்சி மைய இயக்குநர் முனைவர் ஒய்.ஜி. பிரசாத், மூத்த விஞ்ஞானி ராஜேந்தர் ரெட்டி மற்றும் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ஹெ.பிலிப் ஆகியோர் 21.09.2017 அன்று ஆய்வு மேற்கொண்டனர். இராயபுரம் கிராம காலநிலை ஆபத்து மேலாண் குழு உறுப்பினர்கள் மற்றும் கிராம விவசாயிகளிடம் கலந்துரையாடித் திட்டம் சிறப்பாக நடைபெற அறிவுறுத்தினர். திட்டத்தின் வாயிலாகச் சம்பா பருவத்திற்கு பள்ளக்கால் பகுதிகளில் தண்ணீர் தேங்குதலைத் தாங்கி வளரும் தன்மை கொண்ட நெல் சி. ஆர் 1009 சப்-1 நாற்றங்கால் வயல்களைப் பார்வையிட்டனர். இத்திட்டம் வாயிலாக விவசாயிகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ள பல்வேறு கருவிகள் மற்றும் இயந்திரங்கள் கொண்ட வாடகை மையத்தையும் பார்வையிட்டனர். மேலும், தாளடி பருவத்தில் தண்ணீர் தேங்குதலைத் தாங்கி வளரும் ஸ்வர்ணா சப்-1 நெல் விதைகள், உயிரியல் எதிர்கொல்லி மருந்தான சூடோமோனாஸ் ஆகியவற்றை விவசாயிகளுக்கு வழங்கினர். முன்னதாக நிலையச் செயல்பாடுகள் மற்றும் திட்டச் செயல்பாடுகள் குறித்து, திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.பாஸ்கரன் மற்றும் பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ் ஆகியோர் எடுத்துரைத்தனர்.

வேளாண் இயக்குநர் பார்வையிடல்

திருவாரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நிலவள, நீர்வளத் திட்ட நிதி உதவியுடன் குறுவை பருவத்தில் மாற்றுப்பயிராக தண்ணீர் குறைவாகத் தேவைப்படும் மக்காச்சோளம் 107.5 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. இதில் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மக்காச்சோள வயல்களை வேளாண்மை இயக்குநர் திரு. வி. தெட்சணாமூர்த்தி, இ.ஆ.ப அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் திரு. இல.நிர்மல்ராஜ், இ.ஆ.ப. ஆகியோர் 08.09.2017 அன்று பார்வையிட்டனர். அப்போது அவற்றின் சாகுபடி முறைகள் மற்றும் தண்ணீர் தேவைப்படும் விபரங்களைப் பற்றி, திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.பாஸ்கரன் மற்றும் பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ் ஆகியோர் விளக்கிக் கூறினர். பின்னர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் நிகழாண்டு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மத்திய கால நெல் ரகமான கோ (ஆர்) 52 ஐ திருவாரூர் மாவட்டத்தில் பிரபலப்படுத்துதல் மற்றும் பரவலாக்கம் செய்திடும்பொருட்டு விதை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்குவதற்காகப் பாய் நாற்றுகளைப் பயன்படுத்தி இயந்திரம் மூலம் நடவு செய்யும் பணிகளை வேளாண்மை இயக்குநர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மன்னார்குடி கோட்டாட்சியர் திரு. செல்வசுரபி, திருவாரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திரு. க.மயில்வாகனன் உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

புதிய இந்தியா சிந்தனை - விழிப்புணர்வு முகாம்

புதிய இந்தியா சிந்தனை - விழிப்புணர்வு முகாம் இந்நிலையத்தில் 29.08.2017 அன்று மாவட்ட ஆட்சியர் திரு. இல.நிர்மல்ராஜ், இ.ஆ.ப. தலைமையில் நடைபெற்றது. நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.பாஸ்கரன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். மாவட்ட ஆட்சியர் திரு. இல.நிர்மல்ராஜ் அவர்கள் தலைமையேற்று "உற்பத்தியைப் பெருக்க உயர் விளைச்சல் தரும் விதைகள், நாற்றுகளைப் பயன்படுத்த வேண்டும். விவசாயிகள் ஒருங்கிணைந்த பண்ணைய முறையைப் பின்பற்றி வருவாயை மும்மடங்காக அதிகரிக்கலாம், விற்பனைத் தொழில் நுட்பம் மற்றும் விளைபொருட்களைச் சேமித்து மதிப்பு கூட்டி விற்பனை செய்தல் போன்ற விளைபொருட்களின் மதிப்பை அதிகரிக்கும் தொழில் நுட்பங்களில் விவசாயிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும்" என்றார். பின்னர் புதிய இந்தியா சிந்தனை உறுதிமொழி ஏற்பு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியில் இடம் பெற்ற தொழில்நுட்பங்கள், மதிப்பூட்டப்பட்ட பொருட்கள், மாதிரிகள் மற்றும் தஞ்சாவூர் வேளாண் கல்லூரி மாணவிகளின் மீன் வளர்ப்பு, மண்புழு வளர்ப்பு, காளான் வளர்ப்பு மாதிரிகள் ஆகியவற்றை அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் பார்வையிட்டனர். விவசாயிகளுக்கு நிக்ரா திட்டத்தின் கீழ் சம்பா பருவ நெல் விதைகளையும், தென்னங்கன்றுகள் உள்ளிட்ட வேளாண் இடுபொருட்களையும் மாவட்ட ஆட்சியர் வழங்கினார். முகாமில் ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் முனைவர் வெ.ரவி அவர்கள் கலந்து கொண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ள புதிய நெல் ரகங்கள் மற்றும் தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தார். திருவாரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திரு.க. மயில்வாகனன், துணை இயக்குநர் (வணிகம்) திரு. சந்துரு, தோட்டக்கலை துணை இயக்குநர் திரு. ஏ.இ.சுரேஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சியின் இறுதியில் பூச்சியியல்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ் அவர்கள் நன்றி தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் 311 விவசாயிகள், 22 விரிவாக்கத் துறை அலுவலர்கள் மற்றும் 16 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

வெள்ளத்தைத் தாங்கி வளரும் தாளடி பருவ நெல் விதைகள் விவசாயிகளுக்கு வழங்குதல்

பருவ நிலை மாற்றத்திற்கு உகந்த மீள் தன்மை உள்ள வேளாண் திட்டத்தின் (நிக்ரா) சார்பாக தாளடி பருவத்தில் அதிக மழைப் பொழிவால் பள்ளக்கால் பகுதிகளில் தண்ணீர் தேங்குதலைத் தாங்கி வளரும் சுவர்ணா சப்-1 விதைகளை கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ஹெ.பிலிப் இராயபுரம் கிராம விவசாயிகளுக்கு 11.09.2017 அன்று இந்நிலையத்தில் வழங்கினார்.

இத்திட்டத்தின் நோக்கம் பற்றி, திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.பாஸ்கரன் மற்றும் பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ் ஆகியோர் விளக்கிக் கூறினர். இந்நிகழ்ச்சியில் ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் முனைவர் வெ.ரவி, திருச்சி வேளாண்மைக் கல்லூரி முதன்மையர் பி. பாண்டியராஜன், கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஸ்லேட் அலுவலர் பொறியாளர் கே.செந்தில்குமார் மற்றும் இராயபுரம் கிராம விவசாயிகள் கலந்து கொண்டனர்.

மதுரையில் நடைபெற்ற வேளாண் கண்காட்சியில் பங்கேற்பு

மதுரை காந்தி அருங்காட்சியக வளாகத்தில் ஆகஸ்ட் 3 முதல் 6 வரை நடைபெற்ற வேளாண் கண்காட்சியில் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலமாக நவீன வேளாண் தொழில் நுட்பங்களின் மாதிரிகள் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.பாஸ்கரன் அவர்களின் தலைமையில் விவசாயப் பெருமக்களுக்குக் காட்சிப்படுத்தப் பட்டன. நிலையப் பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ், தொழில்நுட்பத் திட்ட உதவியாளர் திருமதி. தெ.ரேகா மற்றும் நிலையப் பண்ணை மேலாளர் திரு. துரை.நக்கீரன் ஆகியோர் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த மாதிரிகளை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை புரிந்த விவசாயிகளுக்கும், தொழில் முனைவோர்க்கும், மாணாக்கர்களுக்கும் பல அரசு சார்ந்த உயர் அதிகாரிகளுக்கும் விளக்கிக் கூறினர்.

பார்த்தீனியம் களைக் கட்டுப்பாடு விழிப்புணர்வு வார விழா

இந்திய அளவில் பார்த்தீனியம் களைகளை ஒழிக்கும் விழிப்புணர்வு வாரம் ஆகஸ்ட் 16 முதல் 22 வரை அனுசரிக்கப்பட்டது. நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக 18.08.2017 அன்று நீடாமங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் விழிப்புணர்வு பயிற்சி நடைபெற்றது. நிகழ்ச்சியை நீடாமங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் திரு.வே.தேவேந்திரன் அவர்கள் தொடங்கி வைத்தார். நிலைய பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ் தனது தொழில் நுட்ப உரையில் "பார்த்தீனியத்தை உயிரியல் முறையில் ஒழிப்பதற்கு சைகோகிரம்மா பைகலரேட்டா என்ற மெக்சிகன் வண்டானது முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, அதை ஒரு ஏக்கருக்கு 500 முதல் 1000 வரை வெளியிட வேண்டும் இரசாயன முறைக் கட்டுப்பாட்டிற்கு ஒரு லிட்டர் தண்ணீருக்குச் சமையல் உப்பு 200 கிராம் உடன் 2 மிலி சோப்பு கரைசல் என்ற அளவில் அல்லது களை முளைக்கும் முன் தெளிக்கும் களைக்கொல்லியான அட்ரசின் என்ற மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 4 கிராம் என்ற அளவில் அல்லது ஒரு லிட்டர் தண்ணீருக்குக் கிளைபாசேட் 10 மிலி அமோனியம் சல்பேட் 20 கிராம் மற்றும் 2 மிலி சோப்பு கரைசல் ஆகியவற்றைக் கலந்து விதைப்புக்கு முன்பு தெளித்துக் கட்டுப்படுத்தலாம்" எனத் தெரிவித்தார்.

பார்த்தீனிய விழிப்புணர்வுப் பேரணியானது 22.08.2017 அன்று திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.பாஸ்கரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விவசாயிகள், தஞ்சாவூர் வேளாண் கல்லூரி உதவிப் பேராசிரியை முனைவர் ஷெலினா மற்றும் வேளாண் கல்லூரி மற்றும் வேளாண் பொறியியல் கல்லூரி மாணவ மாணவிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். விழிப்புணர்வு குறித்து, அலைபேசி வழியாக குறுஞ்செய்திகள், கட்செவி செய்திகள் விவசாயிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. பத்திரிகை செய்தியும் வெளியிடப்பட்டது.

உலகத் தேனீக்கள் தினம்

உலகத் தேனீக்கள் தினத்தைக் கொண்டாடும் விதமாக இந்நிலையத்தில் 22.08.2017 அன்று தேனீ வளர்ப்பு குறித்து ஒருநாள் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. திருவாரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திரு. க.மயில்வாகனன் அவர்கள் பங்கேற்று "திருவாரூர் மாவட்டத்தில் தேனீ வளர்ப்புக்கு நல்ல சூழல் உள்ளது. அதற்குரிய வாய்ப்புகளை வேளாண்மைத்துறை ஏற்படுத்தித் தரும்" எனத் தெரிவித்தார். நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் பேட்ரிக் ஜாஸ்பர் தேனீ வளர்ப்புக் கையேட்டை வெளியிட்டு விவசாயிகளுக்கு நபார்டு வங்கியின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். நீடாமங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் திரு. வே. தேவேந்திரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ், உலகத் தேனீக்கள் தினம் கொண்டாடப்படுவதற்கான காரணங்கள், தேனீக்களின் சிறப்பியல்புகள், தேனீப்பெட்டி வைக்கும்போது கவனிக்கப்பட வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார். ஆண்டிமடம் வி.பி.தேன் பண்ணையைச் சார்ந்த திரு ப. பிரபு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு தேனீ வளர்ப்பு, அவற்றின் பராமரிப்பு முறைகள், தேனீக்களைக் கையாளும் விதம், தேன் அடைகளிலிருந்து தேன் எடுக்கும் முறைகள் பற்றியும் விரிவாகச் செயல்முறை விளக்கங்களுடன் எடுத்துரைத்து விவசாயிகளுடன் கலந்துரையாடினார். திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.பாஸ்கரன் அவர்கள் தன் வரவேற்புரையில் தேனில் உள்ள சத்துகள் மற்றும் அவற்றின் பயன்பாடு குறித்தும் விளக்கினார். பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ் நன்றி தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் 125 விவசாயிகள் விரிவாக்கத் துறை அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

சிறுதானிய பயிர் உயர் விளைச்சல் சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி

இந்நிலையத்தில் 07.07.2017 அன்று சிறுதானியப் பயிர்களில் உயர் விளைச்சல் சாகுபடி குறித்த தொழில்நுட்பப் பயிற்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ. பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. பயிற்சியில் விதை நேர்த்தி, பயிரின் வளர்ச்சி நிலைகளுக்கேற்ப உரமிடுதல் மற்றும் நீர் மேலாண்மை, ஒருங்கிணைந்த முறையில் பூச்சி மற்றும் நோய்க் கட்டுப்பாடு முறைகள் குறித்து, பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ் மற்றும் திரு. செல்வக்குமார் ஆகியோரால் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் 40 விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் கலந்து கொண்டனர்.

காய்கறி சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி

மேலநாகை கிராமத்தில் 01.08.2017 அன்று காய்கறி பயிர்களில் உயர் தொழில் நுட்பங்கள் குறித்து ஒருநாள் பயிற்சி வேளாண் அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.பாஸ்கரன் அவர்களால் நடத்தப் பட்டது. 25 விவசாயிகள் கலந்து கொண்ட இப்பயிற்சியில் பல்வேறு காய்கறிகளின் உயர் விளைச்சல் ரகங்கள், நடவு முறைகள், நவீன நீர்ப்பாசன முறைகள், நீர்வழி உரமிடுதல் மற்றும் களை மேலாண்மை குறித்து செயல் விளக்கங்களுடன் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. காய்கறி சாகுபடியில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய்க் கட்டுப்பாடு முறைகள் குறித்து, பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ் அவர்கள் பயிற்சியளித்தார்.

தூய்மையே சேவை இயக்கம்

பாரதப் பிரதமரின் தூய்மையே சேவை இயக்கம் குறித்த விழிப்புணர்வு முகாம் செப்டம்பர் 22 முதல் அக்டோபர் 2 வரை இந்நிலையத்தால் நடத்தப்பட்டது. நிலைய அலுவலர்கள், விவசாயிகள், மாணாக்கர்களால் தூய்மையே சேவை உறுதிமொழி எடுக்கப்பட்டது. நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக விழிப்புணர்வுப் பேரணி மேற்கொள்ளப்பட்டது. நிலைய வளாகம், சுற்றுப்புறங்கள், பொது இடங்கள், வழிபாட்டுத் தலங்கள், புகைவண்டி நிலையம் ஆகிய இடங்களில் நிலைய அலுவலர்கள் மற்றும் தஞ்சாவூர், திருச்சி, செங்கிப்பட்டி வேளாண் கல்லூரி மாணவ மாணவிகளால் தூய்மைப் பணிகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. முன்னதாகச் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் குறித்து, குறுஞ்செய்தி மற்றும் கட்செவி வாயிலாக உழவர் பெருமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பயிற்சிகள்

மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரித்தல் - தொழில்முனைவோர் பயிற்சி

இந்நிலையத்தில் 19.09.2017 அன்று முதல் நிலை செயல் விளக்கத்தின் ஒரு பகுதியாகப் பதப்படுத்தப்பட்ட முருங்கைக் காய்கள் மற்றும் கீரைகளிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரித்தல் பயிற்சி நடத்தப்பட்டது. திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.பாஸ்கரன் அவர்கள் முருங்கையின் முக்கியத்துவம் மற்றும் முருங்கைக் கீரையில் உள்ள ஊட்டச் சத்துகள் குறித்துப் பயிற்சியளித்தார். 42 விவசாயிகள் கலந்து கொண்ட இப்பயிற்சியில் திட்ட உதவியாளர் திருமதி தெ.ரேகா அவர்கள் முருங்கைக் கீரையிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரித்தல் குறித்துச் செயல் விளக்கம் அளித்தார்.

நெல்லில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பயிற்சி

நெல்லில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்து ஆத்மா திட்ட விவசாயிகளுக்கு 07.09.2017 அன்று நீடாமங்கலம் வட்டாரம் காளாஞ்சிமேடு கிராமத்தில் நிலையப் பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ் அவர்களால் செயல் விளக்கத்துடன் பயிற்சியளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் 25 விவசாயிகள் பயனடைந்தனர்.

குதிரைவாலி வயல் தின விழா

காவிரிப் பாசனப் பகுதியில் சிறு தானியப் பயிர்களை மீளக் கொணர்தல் திட்டத்தின் கீழ் கொரடாச்சேரி வட்டார, வில்வநாதபுரம் கிராமத்தில் குதிரைவாலி பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 31.07.2017 அன்று வில்வநாதபுரம் கிராமத்தில் வயல் தின விழா நடைபெற்றது. குதிரைவாலி சாகுபடியின் அனுகூலங்கள் குறித்துக் கலந்து கொண்ட விவசாயிகளிடையே எடுத்துரைக்கப்பட்டன.

மாதாந்திர மண்டலக் கூட்டம்

விரிவாக்க அலுவலர்களுக்கான மாதாந்திர மண்டலக் கூட்டம் 12.09.2017 அன்று இந்நிலையத்தில் நடைபெற்றது. திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.பாஸ்கரன் அவர்கள் பேசுகையில் காய்கறிப் பயிர்களின் முக்கியத்துவம் குறித்தும் முதல் நிலை செயல் விளக்கத் திடல்கள் மற்றும் வேளாண் அறிவியல் நிலைய நடப்பாண்டு செயல்பாடுகள் குறித்தும் எடுத்துரைத்தார். பூச்சியியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் இராஜா. ரமேஷ் அவர்கள் சம்பா மற்றும் தாளடி பருவத்திற்கேற்ற ரகங்கள் மற்றும் நெல்லில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு உத்திகள் குறித்து விரிவாகப் பயிற்சியளித்தார். இதில் திருவாரூர் மாவட்டத்தின் 10 வட்டாரங்களிலிருந்து 45 வேளாண்மைத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வயல் வெளி ஆய்வுகள்

மக்காச்சோள வயல்களில் வேளாண் விஞ்ஞானிகள் ஆய்வு

தமிழ்நாடு நிலவள, நீர்வளத் திட்டத்தின் கீழ் தண்ணீர் பற்றாக்குறை உள்ள இடங்களில் குறுவையில் மாற்றுப் பயிராக மக்காச்சோளம் அறிமுகப்படுத்தப்பட்டு சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. ஆதனூர், முன்னாவல்கோட்டை, செட்டிச்சத்திரம், கீழநாகை ஆகிய கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வயல்களில் 19.07.2017 மற்றும் 20.07.2017 ஆகிய தினங்களில் பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு தண்டு துளைப்பானின் தாக்குதலைக் கண்டறிந்து உரிய பரிந்துரைகளை விவசாயிகளுக்கு அறிவுறுத்தினார்.

மன்னார்குடி பகுதியில் நெல் வயல் ஆய்வு

மன்னார்குடி வட்டாரம் சவளக்காரன், இராமாபுரம், மூணாம்சேத்தி ஆகிய கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள குறுவை நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு அறிகுறி தென்படும் வயல்களை நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.பாஸ்கரன், பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா.ரமேஷ் ஆகியோர் மன்னார்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் திரு. உத்திராபதி மற்றும் வேளாண் அலுவலர் ஆகியோருடன் இணைந்து பார்வையிட்டு அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்த வேண்டும் எனத் தெளிவாக விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.